புதுச்சேரி அரசு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காரைக்கால்

*****

நாள்: 12-01-2018.

## செய்திக்குறிப்பு

தமிழர்கள் கொண்டாடும் முக்கிய பண்டிகைகளில் தனி சிறப்பு வாய்ந்தது பொங்கல் பண்டிகை ஆகும். பொங்கல் நன்னாளுக்கு முதல் நாள் போகிப்பாண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்நாளில் வேண்டாத பழைய பொருட்களை எரிப்பதென்பது மக்களிடம் காலந்தொட்டு வரும் ஒரு வழ்க்கமாகும். ஆனால் போகியன்று இன்றைய சூழ்நிலையில் மக்கள் நெருக்கம் மிகுந்த நகரங்களில் டயர், ரப்பர், பிளாஸ்டிக் போன்ற பொருட்களையும் எரிப்பதால் நச்சுபுகை மூட்டம் ஏற்பட்டு மக்களுக்கு சுவாச நோய்கள், இருமல் மற்றும் நுரையீரல், கண், மூக்கு, காது எரிச்சல் உள்பட பல்வேறு நோய்கள் எற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் நச்சுக்காற்றாலும், கரிப்புகையினாலும் காற்று மாசுபட்டு சுற்றுச் சூழல் சீர்கேடு அடைகிறது. பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதனால் புற்றுநோயை விளைவிக்கக் கூடிய டைஆக்சின் மற்றும் பியூரான் என்கிற நச்சுக்காற்று வெளிப்பட்டு மக்கள் நலன் பாதிப்படைய வாய்ப்பு உள்ளது.

எனவே பொது மக்கள் போகிப்பண்டிகையன்று டயர், ரப்பர், பிளாஸ்டிக் பொருட்கள், தெர்மோகால், செயற்கை இழைத்துணி போன்ற பொருட்களை எரிக்க வேண்டாம். பொங்கல் திருநாளை மிக்க மகிழ்ச்சியுடனும் மாசற்ற சுற்றுச்சூழலுடனும் கொண்டாட பொதுமக்களின் ஒத்துழைப்பை நல்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(இர. தேசவன், இ.ஆ.ப)
மாவட்ட ஆட்சியர்
காரைக்கால்.

பெறுதல்
1.செய்தி மற்றும் விளம்பரத் துறை, காரைக்கால் - விரிவான விளம்பரத்திற்கு.
2.மாசுக்கட்டுப்பாட்டு குழுமம், காரைக்கால்.
நகல் பெறுநர்
1.சார்பு ஆட்சியர்( வருவாய்), காரைக்கால்
2.முதுநிலை காவல் கண்காணிப்பாளர், காரைக்கால்.

12/1/18
Asst. P. R. O. to
COLLECTOR